பக்கங்கள் 23 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 16 சனிக்கிழமை 28.02.2026 | அதிர்வு 204

## கச்சதீவில் திரண்ட 13,500 பக்தர்கள்!

திருவிழா கோலாகலமாக நிறைவு



(விரிவான செய்தி 5 ஆம் பக்கம்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# "பழசும் வேண்டாம்; புதுசும்வேண்டாம்!"

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கில் மாபெரும் போராட்டங்கள்

(எஸ்.நிதர்ஷன், வாலகிருஸ்ணா, க.சரவணன்)

"பழசும் வேண்டாம், புதுசும் வேண்டாம்" எனும் முழக்கத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

"தாயக செயலணி" அமைப்பின் ஏற்பாட்டில் இந்த எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்றன.

### யாழ்ப்பாணத்தில் ஆளுநர் அலுவலகம் வரை பேரணி

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய நூற்றுக் 06





# யாழ். செம்மணி மனிதப் புதைகுழிகள் கடந்த காலக் கொடூரத்தின் சாட்சிகள்!

## தாயகத்தின் நீதிக்காக நோர்வே நாடாளுமன்றில் குரல் கொடுத்த கம்ஷாயினி குணரத்னம் எம்.பி.

“ஒரு நாட்டில் யுத்தம் முடிவுக்கு வருவதை, அந்த நாட்டில் நிலவும் மோதல்கள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருத முடியாது” என்று நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் கம்ஷாயினி குணரத்னம் தெரிவித்தார்.

இலங்கையின் சமகால நிலைவரம் குறித்து நோர்வே நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கம்ஷாயினி குணரத்னம் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமையவே இந்த விவாதம் நடைபெற்றது.

அங்கு அவர் ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

“நான் 1988 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தச் சூழலில் பிறந்தேன். நான் எனது தாயின் கருவறையில் இருந்தபோது, ஒவ்வொரு முறை விமானத் தாக்குதலுக்கான அபாய எச்சரிக்கை ஒலிக்கும் போதும், எனது தாய் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுவார். நானும் எனது தம்பியும் இலங்கையிலேயே பிறந்தோம். ஆனால், வாழ்க்கை எங்களைப் பாதுகாப்பான நாடான நோர்வேக்கு அழைத்து வந்தது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், யுத்தம் முடிவடைவது என்பது மோதல்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாகப் பொருள் கொள்ளாது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள், குறிப்பாக செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் கடந்த காலத்தின் கொடூரங்களை நினைவூட்டுகின்றன. அங்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரது எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தற்செயலான நிகழ்வல்ல் மாறாக பல தசாப்தங்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதைகளுடன் இது தொடர்புடையது.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்கள் சர்வதேச மட்டத்தில் ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன. குறிப்பாக, புதிய அரசு ஊழலுக்கு எதிராக எடுத்த நிலைப்பாடு மற்றும் அரசியல் சீர்திருத்தம் குறித்த வாக்குறுதிகள் அந்த நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்தன.

இருப்பினும், அந்த வாக்குறுதிகள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. தமிழர் வாழும் பகுதிகளில் இன்றும் இந்துக்கோயில்கள் இடிக்கப்படுவதாகவும், பௌத்த விகாரைகள் நிறுவப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் புதிய மனிதப் புதைகுழிகள் கண்டறியப்படுவதும், நிலங்கள் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதும் கவலையளிக்கின்றது.” - என்றார்.

# அனுராதபுரத்தில் ஒருவர் கொடூரமாகக் கொலை!

## வீட்டு உரிமையாளரின் ஆத்திரத்தால் பறிபோன உயிர்

அனுராதபுரம், சாலியபுர - தெப்பங்குளம் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

வீட்டின் உரிமையாளருக்கும், வீட்டுக்கு வருகை தந்த நபர் ஒருவருக்கும் இடையில் திடீரென ஏற்பட்ட தர்க்கம் பின்னர் மோதலாக மாறியுள்ளது. இதன்போது ஆத்திரமடைந்த வீட்டு



உரிமையாளர், கூரிய ஆயுதத்தால் அந்த நபரைத் தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சாலியபுர பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய வீட்டு உரிமையாளரை அனுராதபுரம் பொலிஸார் உடனடியாகக் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

“வடக்கு - கிழக்கில் இராணுவமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வை!”

# அநுர அரசாங்கத்துக்கு நோர்வே கடும் அழுத்தம்!

- ☆ நில அபகரிப்பை நிறுத்து
- ☆ செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்கு
- ☆ சிறுபான்மையினரின் மத உரிமைகளை உறுதிப்படுத்து
- ☆ காணாமல் ஆக்கப்பட்டோருக்குப் பதில் சொல்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் நில அபகரிப்பு, இராணுவமய மாக்கல் மற்றும் சிறுபான்மையினரின் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்து நோர்வே அரசு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

அத்துடன், வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி உள்ளிட்ட விடயங் களில் வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் நோர்வே வலியுறுத்தியுள்ளது.

நோர்வே நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின் போதே நோர்வே வெளிவிவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இதனைத் தெரிவித்தார்.

நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் கம்ஷாயினி குணரத்னம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:- “2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் இலங்கையில் ஒரு புதிய அரசியல்



சூழலை உருவாக்கியுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமை யிலான புதிய அரசு ஊழல் ஒழிப்பு, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை வழங்கி யுள்ளது. இந்த மாற்றங்களை நோர்வே வரவேற்கின்றது.

இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றும் பல சவால் கள் நிலவுகின்றன என்பதை நாம் அறிவோம். குறிப்பாக நில அபகரிப்பு, இராணுவமயமாக்கல் மற்றும் சிறுபான் மையினரின் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்த தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இது தொடர் பாக நாம் இலங்கை அரசுடன் நேரடி யாகக் கலந்துரையாடி வருகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் செம்மணி உள்ளிட்ட பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான விசாரணைகள் நியாயமான முறையிலும், வெளிப்படை யாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதில் நோர்வே உறுதியாக உள்ளது. உண்மை கண்டறியப்படும் போது மாத் திரமே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுத்தர முடியும்.

இலங்கையில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப் படும் தீர்மானங்களுக்கு நோர்வே தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகின்றது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் மற்றும் அதன் பின்னரான விசாரணைகள் குறித்தும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இலங்கை அரசு சர்வதேச சமூகத் துக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.” – என்றார்.

# தண்ணீர் பிரச்சினை கொலையில் முடிந்தது: ஹட்டனில் குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு!

## ஐவர் வைத்தியசாலையில்; மூவர் விளக்கமறியலில்

ஹட்டன், ருவன்புர பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குடிதண்ணீர் விநியோகம் தொடர் பாக ஏற்பட்ட தர்க்கம் பாரிய மோதலாக மாறியதிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ருவன்புர பகுதியில் குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோ கத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக, கடந்த 24 ஆம் திகதி முதல் இரு தரப்பி னருக்கும் இடையே தொடர்ச்சியாக வாக்குவாதங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இந்தத் தர்க்கம் முற்றிய நிலையில் இரு குழுக்களும் மோதிக்கொண்டதில் 6 பேர் காயமடைந்து வைத்திய



சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் பலத்த காயங்களுக்கு உள்ளான 39 வயது டைய நபர், கண்டி போதனா வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் ருவன்புர பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

இந்த மோதலில் காயமடைந்த ஏனையோர் தற்போது டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் உயிரிழந் தவரின் சகோதரரும் ஒருவராவார் எனப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர் பாகக் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்கள், நேற்று வெள்ளிக் கிழமை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர் களை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை ஹட்டன் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அநுரவின் நாடக அரசியல் விரைவில் முடிவுக்கு வரும்!

## இப்படிச் சாடுகின்றார் மனோ எம்.பி.




தேசிய மக்கள் சக்தி அரசு அரங்கேற்றிக் கொண்டிருக்கும் நாடக அரசியல் விரைவில் முடிவுக்கு வரும் எனவும், நிலக்கரி ஊழல் இந்த ஆட்சியின் உண்மையான முகத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளது எனவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"தேசிய மக்கள் சக்தி அரசு தேர்தலின் போது கூறிய பொய்களை அடிப்படையாகக் கொண்டே தற்போது ஆட்சியை முன்னெடுத்து வருகின்றது. தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவினால் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுவதுடன், செலவும் அதிகரிக்கவுள்ளது.

முன்னர் அரிசி இறக்குமதியின் போது மோசடியில் ஈடுபட்டு "கறுப்புப் பட்டியலில்" சேர்க்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கே, இந்த அரசு நிலக்கரி விநியோகத்துக்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. இந்த மோசடியால் நாட்டுக்கு 700 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர்கள் இதனை மறுத்தாலும், அநுரகுமாரவின் ஆட்சியின் முகத்தில் இந்த ஊழல் கரியைப் பூசியிருக்கின்றது.

தங்களை இடதுசாரிகள் என சமூக வலைத்தளங்களில் கூறிக்கொள்பவர்கள் ஜே.வி.பி.யின் வரலாற்றை அறியாதவர்கள். இந்திய எதிர்ப்புக் கொள்கையிலேயே ரோஹண விஜேவீர இந்த கட்சியை நிறுவினார். ஆனால் இன்று வேறு வழியின்றி அவர்கள் இந்தியாவின் காலடியில் சரணடைந்துள்ளனர். மக்களுக்குத் தேவை முறையான ஆட்சியே தவிர, இவ்வாறான கண்காட்சிகள் அல்ல.

எந்த ஆட்சி வந்தாலும் மலையக மக்களின் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகவே உள்ளது. 2015 - 2019 காலப் பகுதியே அந்த மக்களுக்குப் பொற்காலமாக அமைந்தது. ஜனாதிபதி அவர்கள் வெறும் தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர்களின் கைகளைப் பார்ப்பதை விடுத்து, அவர்களின் வீட்டு மற்றும் காணி உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

மலையக மக்களை வெறும் தொழிலாளர்களாக அன்றி, அவர்களைப் பங்காளிகளாக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். இது தொடர்பாக நாம் சஜித் பிரேமதாஸவுடன் ஒப்பந்தம் செய்திருக்கின்றோம். எமது ஆட்சி மலரும் போது அதனை நிச்சயமாக நிறைவேற்றுவோம்." - என்றார்.

# ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச்சூடு: பெண் உட்பட இருவர் கைது!

## 7 நாள் தடுப்புக்காவலில் விசாரணை



கொழும்பு - ஜிந்துப்பிட்டி பகுதியில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர், போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பணியகத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போதே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

சேதவத்தை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய ஆண் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடவத்தை - சூரியபாலுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வெஹெரகொடெல்ல பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வெல்லம்பிட்டிய - வெஹெரகொடெல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, கைது செய்யப்பட்ட ஆண் சந்தேகநபர் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை ஆயுதத்துடன் தனது ஓட்டோவில் அழைத்துச் சென்ற சாரதி எனத் தெரியவந்துள்ளது. பெண் சந்தேகநபர் அவருக்கு உதவியாளராகச் செயற்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட போது ஆண் சந்தேகநபரிடமிருந்து 6 கிராம் 540 மில்லிகிராம் "ஐஸ்" போதைப்பொருளும், பெண் சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 100 மில்லிகிராம் "ஐஸ்" போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரையும் 7 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கான உத்தரவைப் பெற்றுக்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பணியகத்தினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.




# கச்சதீவில் திரண்ட 13,500 பக்தர்கள்!

## புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கோலாகலமாக நிறைவு

(ந.லோகதயாளன்,
எஸ்.நிதர்ஷன்)

இலங்கை மற்றும் இந்திய பக்தர்களின் உறவுப் பாலமாகத் திகழும் வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா, இம்முறை 13 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பக்தர்களின் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்தந்தை பத்திநாதன் அடிகளால் திருவிழாக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு, உற்சவ நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி என்பன இடம்பெற்றன. விசேட ஆராதனைகளை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் தலைமையிலான அருட்தந்தையர்கள் வழிநடத்தினர்.

இன்று காலை நடைபெற்ற பிரதான திருவிழாத் திருப்பலி, யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் தலைமையில், இலங்கை மற்றும் இந்திய அருட்தந்தையர்களின் பங்கேற்புடன் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவடைந்ததைத் தொடர்ந்து இவ்வாண்டுக்கான திருவிழா உத்தியோகபூர்வமாக நிறைவு பெற்றது. இந்தத் திருவிழாவில் இலங்கை மற்றும் இந்தியாவைப் பிரதிநிதித்து வப்படுத்திப் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்:

பிரதம நீதியரசர் பிரிதி பத்மன் சூரசேன, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொட உள்ளிட்ட கடற்படை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இம்முறை 13 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான பக்தர்கள் கடல் கடந்து வந்து புனித அந்தோனியாரின் அருளைப் பெற்றுக்கொண்டனர்.

பக்தர்களுக்கான போக்குவரத்து, உணவு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இலங்கை கடற்படையினரும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து முன்னெடுத்திருந்தன.










06



# கச்சதீவில் திரண்ட 13,500 பக்தர்கள்!














## பழசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கான போராட்டக்காரர்கள், அங்கி ருந்து பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் அமைப்பினர், கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமள விலானோர் கலந்துகொண்டு பயங்கர வாதத் தடைச் சட்டத்துக்க எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

**மட்டக்களப்பில் காந்தி பூங்கா வரை எதிர்ப்புப் பேரணி**

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் போராட்டக் காரர்கள் ஒன்றுகூடினர். அங்கிருந்து பேரணியாகப்புறப்பட்ட அவர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்காவைச் சென்றடைந்தனர்.

இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மதத் தலைவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலதரப்பட்டோர் பங் கேற்றனர்.

**போராட்டத்தின் கோரிக்கைகள்**

தற்போது நடைமுறையில் உள்ள அடக்குமுறை மிகுந்த “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை“ உடனடியாக நீக்க வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் புதிய “பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை“ முற்றாகக் கைவிட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

ஜனநாயக விழுமியங்களைப் பாது காக்கவும், மக்களின் அடிப்படை உரிமை களை உறுதிப்படுத்தவும் இவ்வாறான கறுப்புச் சட்டங்கள் நாட்டுக்குத் தேவை யில்லை என்பதே இப்போராட்டத்தின் பிரதான செய்தியாக அமைந்தது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜெனிவாவின் வலியுறுத்தல்

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்' எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் இரண்டு சட்டங்களுக்கு எதிராகவும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் எதிர்ப்பு வலுத்து வருகின்றது.

புதிய சட்ட வரைவு பல்வேறு கரிசனைக்குரிய விடயங்களை உள்ளடக்கியிருப்பதனால், அதனை முழுமையாக மாற்றியமைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் எனவும், இல்லாவிடின் அதன் பிரயோகத்தை இடைநிறுத்தவேண்டும் எனவும் கோரியுள்ளது.

பொலிஸாரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர், பொலிஸாருக்கு வழங்குகின்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாகக் கருதமுடியும் என்ற விடயம் நீக்கப்பட்டிருப்பது உள்ளடங்கலாக இப்புதிய வரைவில் சில முன்னேற்றகரமான விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இருப்பினும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நாட்டின் அரசமைப்பு என்பவற்றின் பிரகாரம் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளுக்கு முரணான பல விடயங்கள் இந்த வரைவில் உள்ளடங்கியுள்ளன. அவை தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின்கீழ் நிகழும் மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்வதற்கான அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றன என்று ஜெனிவா செயலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

புதிய வரைவு ஏற்கனவே உள்ள சட்டத்தில் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட பல குறைபாடுகள் மற்றும் அவற்றின் மேலும் விரிவுபடுத்தப்பட்ட கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. 'பயங்கரவாதம்' எனும் பதத்துக்கான பரந்துபட்ட வரைவிலக்கணத்தின் காரணமாக தீவிர குற்றமாக்கப்படல், கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் என்பன ஒடுக்கப்படுவதுடன் சிவில் இடைவெளி சுருங்குதல், வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புடன் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் மட்டுமீறிய அதிகாரங்கள், முறையான நீதிமன்ற மேற்பார்வையின்றி ஒருவரை வலுகட்டாயமாகக் கைதுசெய்வதற்கும், நீண்டகாலம் தடுத்துவைப்பதற்குமான அதிகாரம் அளிக்கப்படல், கைதுசெய்யப்படும் சந்தேகநபர் சித்திரவதைகள், வலிந்து காணாமலாக்கப்படல் மற்றும் ஏனைய முறையற்ற கையாளுகைக்கு உட்படுத்தப்படுவதற்கான சாத்தியப்பாடு, உரியவாறான வழக்கு விசாரணை செயன்முறை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு புதிய கரிசனைகள் எழுந்துள்ளன என்று ஜெனிவா தெரிவித்துள்ளது.

எனவே சர்வதேச சட்டக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு ஏற்புடையவாறு புதிய சட்ட வரைவை மீளத்திருத்தியமையுங்கள். இருக்கும் சட்டத்தில் நிலவும் குறைபாடுகள் புதியதில் உள்வாங்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சிவில் சமூகம் மற்றும் ஏனைய சகல தரப்பினருடனும் செயற்திறன்மிக்க பரந்துபட்ட கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை உயர்ஸ்தானிகரகம் கோரியிருக்கின்றது.

சர்வதேசத்தின் இந்த அழுத்தம் அநுர அரசின் காதில் ஏறுமா?



# மாற்றுத் தீர்வு எட்டப்படும் வரை மாகாண முறைமை நீக்கப்படாது!

## ரில்வின் சில்வா அதிரடி அறிவிப்பு

இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு மாற்றுத் தீர்வைக் கண்டுபிடிக்கும் வரை மாகாண சபை முறைமை நீக்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இனப்பிரச்சினைக்குச் சரியானதொரு தீர்வை உருவாக்க வேண்டும் என்பதை எமது தேர்தல் அறிக்கையிலேயே நாம் உறுதியளித்திருந்தோம். மாகாண சபைகள் அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்ற உதவவில்லை என்பது எமது கருத்து. எவ்வாறாயினும், ஒரு சிறந்த மாற்றுத் தீர்வைத் தேடும் வரை மாகாண சபைகள் அவ்வாறே இருக்கும். முறையான மாற்றுத் தீர்வொன்றை எட்டாமல் அவற்றை நாம் அகற்றப்போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டச் சிக்கல் காரணமாகவே மாகாண சபைகளை தற்போது இயக்க முடியாத சூழல் காணப்படுகிறது. இந்த ஆண்டில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நாம் திட்டமிட்டிருந்த போதிலும், "டித்வா" புயல் அனர்த்த காரணங்களால் அது சாத்தியப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அதனை எவ்வாறு நடத்துவது என்பதே தற்போதைய கேள்வி. தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள சட்டச் சிக்கல்கள் நீக்கப்பட வேண்டும். அத்துடன் எல்லை நிர்ணயம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

எல்லை நிர்ணய நடவடிக்கைகளை முன்னெடுப்பதா இல்லையா என்பது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. இது குறித்து விரிவாக ஆராய்வதற்காக தற்போது ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது." – என்றார்.

# வெல்லம்பிட்டியில் வீடு புகுந்து இளைஞர் வெட்டிப் படுகொலை!

## போதைப்பொருள் விவகாரமே காரணம் எனச் சந்தேகம்

கொழும்பு, வெல்லம்பிட்டி – சாதம் வத்தை பகுதியில் நேற்று வீடு புகுந்த இனந்தெரியாத கும்பல் நடத்திய வாள் வெட்டுத் தாக்குதலில் 22 வயது இளைஞர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் கிராண்ட்பாஸ், சாதம் வத்தை - ஒருகொடவத்தை பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட் டுள்ளார்.

இவர் குறித்த வீட்டின் உரிமையாளருடன் தற்காலிகமாகத் தங்கியிருந்தவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைக்கான பின்னணியில் போதைப்பொருள் விவகாரம் இருக்கலாம் எனப் பொலிஸார் பலத்த சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



வீட்டின் உரிமையாளர் தற்போது போதைப்பொருள் கடத்தல் தொடர்பான வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக, போதைப்பொருள் கடத்தல் குழுக்களுக்கிடையே நிலவும் நீண்டகாலப் பகை அல்லது பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

நேற்று வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த இனந்தெரியாத நபர்கள், அங்கிருந்த இளைஞரை வாளால் வெட்டித் தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளனர். படுகாயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.



# காலி பிரதேசத்தில் 20 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் ஹோட்டல் ஊழியர் கைது!

சுமார் 20 கோடி ரூபா பெறுமதியுடைய ஹெரோயின் மற்றும் “ஐஸ்“ போதைப்பொருள் தொகையைத் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த ஹோட்டல் ஊழியர் ஒருவரை காலி, அ/ஹங்கல்லை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

வதுகெதர, ஆந்தாதொல பகுதியில் சந்தேகநபர் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டைச் சோதனையிட்ட போதே இந்தப் பாரிய போதைப்பொருள் தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அஹுங்கல்லை பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின், 5 கோடி ரூபா பெறுமதியான “ஐஸ்“ என்பவையே மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் பலபிட்டிய, மகலதுவ பகுதியைச் சேர்ந்த ஒரு ஹோட்டல் ஊழியர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் குறித்த வீட்டை வாடகைக்கு எடுத்து, போதைப்பொருள் விநியோகத் தளமாகப் பயன்படுத்தி வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை பலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை அஹுங்கல்லை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இவ்வளவு பெரிய தொகையிலான போதைப்பொருள் இவருக்கு எப்படிக் கிடைத்தது மற்றும் இதன் பின்னணியில் உள்ள பிரதான கடத்தல் கும்பல் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சோதனைக்குச் செல்வதாகப் பொய் கூறி விட்டு

# விடுதியில் பெண்ணுடன் தங்கியிருந்த பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம்!

சோதனை நடவடிக்கைகளுக்காகச் செல்வதாகப் பொலிஸ் புத்தகத்தில் பதிவிட்டுவிட்டு, விடுதி ஒன்றில் பெண்ணொருவருடன் தங்கியிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை, வெலிப்பன்ன பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வெலிப்பன்ன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கே. அனுரஜித்தின் உத்தரவின் பேரில், மேலும் மூன்று அதிகாரிகளுடன் இணைந்து விசேட




சோதனை நடவடிக்கைகளுக்காகச் செல்வதாகக் கூறி, மேற்படி சார்ஜன்ட் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளார். இதற்கான உத்தியோகபூர்வ பதிவுகளையும் அவர் பணிப்புத்தகத்தில் மேற்கொண்டுள்ளார்.

இருப்பினும், கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நிலையப் பொறுப்பதிகாரி மேற்கொண்ட திடீர் சோதனையின் போது, மேற்படி சார்ஜன்ட் மத்துகம – அகலவத்தை வீதியிலுள்ள விடுதி ஒன்றின் அறையில் பெண்ணொருவருடன் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

உயர் பொலிஸ் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில், கடமை தவறியமை மற்றும் ஒழுங்கீனமான முறையில் நடந்துகொண்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவரது பணி உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் உயர்மட்டம் முன்னெடுத்து வருகின்றது.

# உலகிலேயே அதிக பணயக் கைதிகளை மீட்டெடுத்தது இலங்கை இராணுவமே!

## இங்கு இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறுகின்றார் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர



இலங்கையில் போர்க்குற்றங்களோ அல்லது இனப்படுகொலையோ நடைபெறவில்லை எனவும், உலகிலேயே அதிகப்படியான பணயக் கைதிகளை மீட்ட பெருமை இலங்கை இராணுவத்தையே சாரும் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறிய தாவது:-

"இலங்கையில் போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை நடந்ததாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டு வருகின்றன. ஆனால், உண் மையில் அவ்வாறு எதுவும் நடக்க வில்லை. பிரபாகரன் சுமார் 3 இலட்சம் மக்களைப் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்தார். அவர்களில் 2 இலட்சத்து 90 ஆயிரம் பேரை எமது படையினர் மனிதாபிமான அடிப்படை யில் மீட்டெடுத்தனர்.

உலக வரலாற்றிலேயே இவ்வளவு அதிகமான எண்ணிக்கையிலான பணயக் கைதிகளை மீட்ட ஒரே இரா ணுவம் இலங்கை இராணுவமாகும். அவ்வாறு மீட்கப்பட்ட மக்கள் அனைவரும் முறையாக மீள்குடியமர்த் தப்பட்டனர்.

இலங்கை இராணுவம் முன்னெடுத்த இவ்வாறான மனிதாபிமானத் திட்டங்களுக்கு பிரிட்டனில் உள்ள தமிழ் மாணவ அமைப்புகள் எவ்வித ஒத்து ழைப்பையும் வழங்கவில்லை." - என்றார்.



# காலியில் 7 இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது!

சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியு டைய போதை மாத்திரைகளைக் கடத்திச் சென்ற நபர் ஒருவர் காலியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கொஸ்கொட பொலிஸ ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரகஸ்மங்ஹந்திய, யுத்தபிட்டிய விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வைத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின் போதே சந்தேகநபர் சிக்கி யுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஊரகஸ் மங்ஹந்திய, கைலத்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 1,340 போதை மாத்திரைகள் அடங்கிய பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை ஊரகஸ்மங்ஹந்தியிலிருந்து கொஸ்கொட நோக்கி விற்பனைக்காக எடுத்துச் செல்லப்பட்டவை என ஆரம் பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

சந்தேகநபர் ஒரு போதை மாத்தி ரையை 500 ரூபா என்ற விலையில் விற்பனை செய்து வந்துள்ளார். இதற் கமைய, கைப்பற்றப்பட்ட மொத்த மாத்திரைகளின் பெறுமதி சுமார் 6 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா (கிட்டத்தட்ட 7 இலட்சம் ரூபா) என மதிப்பிடப் பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளைக் கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நடந்த பெரும் போராட்டம்

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)




























# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக மட்டக்களப்பில் நடந்த பெரும் போராட்டம்

(படங்கள்:- வாலகிருஸ்ணா, க.சரவணன்)

































# கால்வாயில் விழுந்து வயோதிபப் பெண் பலி!

## மாத்தளையில் சோகம்

மாத்தளை - இரத்தோட்டை பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் தனது வீட்டுக்கு அருகிலுள்ள கால்வாயில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் இரத்தோட்டை, கைகாவல பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரத்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# மட்டு.கன்னங்குடா பகுதிக்கு வந்த நோய்வாய்ப்பட்ட காட்டு யானை

(ஜதுர்சயன்)

மட்டக்களப்பு மாவட்டம் வவுனதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கன்னங்குடா பகுதியில் நோய்வாய்ப்பட்ட நிலையில், காட்டு யானை ஒன்று மக்கள குடியிருப்பை அண்மித்த பகுதியில் காணப்படுகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை வேளை முதல் மேற்படி யானை வேறு எங்கும் நகர்ந்து செல்ல முடியாத நிலையில், ஒரே இடத்திலேயே நின்ற வண்ணம் உள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமது பகுதிகளை காட்டு யானைகள் தினமும் நாசம் செய்து வரும் நிலையில், கிராமத்திற்குள் ஊடுருவ முயற்சித்த இந்த யானை நோய்வாய்ப் பட்ட நிலையில் அவ்விடத்திலே நிற்கின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அது ஒரு காட்டு விலங்கு என்ற ரீதியில் தாம் வானை, தென்னை போன்ற உணவுகளை வழங்கி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், அந்த காட்டு யானைக்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சை வழங்கி வருகின்றனர்.











# களுவாஞ்சிகுடியில் இடம்பெற்ற பொலிஸ் பரிசோதனை நிகழ்வு

**(ஜதுர்சயன்)**

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பரிசோதனை நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை களுவாஞ்சிகுடி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லீலா ரெத்ன கலந்து கொண்டு பரிசேதனைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பொலிஸாரின் அணி வகுப்பு மரியாமை இடம்பெற்றதுடன், பொலிஸாரின் வாகனங்களும் பரிசீலனை செய்யப்பட்டன.

















# நாட்டை வந்தடைந்தது லாப்ஸ் எரிவாயு கப்பல்



லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி எரிவாயு இன்று ஊஜெயேசு வுழுசுயுதுயு கப்பல் மூலம் நாட்டை வந்தடைந்ததாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று முதல் உடனடியாக சந்தைக்கு எரிவாயு தொகுதி வெளியிடப்படும் என்று நிறுவனம் கூறுகிறது.

உள்நாட்டு வாடிக்கையாளர்கள் இன்று முதல் வழக்கம் போல் லாப்ஸ் எரிவாயு விற்பனை முகவர்கள் மூலம் தேவையான எரிவாயு சிலிண்டர்களை வாங்க முடியும் என்று நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# பாரிஸின் சிறந்த 'பகுட்' தயாரிப்பாளராக இலங்கையரான ஜெகதீபன் தெரிவானார்





பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற "Grand Prix de la Baguette de Tradition Française" போட்டியில், இலங்கையைச் சேர்ந்த சிற்றம்பலப்பிள்ளை ஜெகதீபன் முதலிடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

43 வயதான அவர், தனது முதலாவது போட்டியிலேயே 142 போட்டியாளர்களைத் தோற்கடித்து இந்த வெற்றியை ஈட்டியுள்ளார்.

பாரிஸில் அமைந்துள்ள இவரது 'Fouil Didot" உணவகத்திற்கு இந்த வெற்றிக்காக 4,000 யூரோக்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த ஒரு வருடத்திற்கு பிரான்ஸ் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லமான எலிசி அரண்மனைக்கு "பகுட்" பாண்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்தமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து, புலம்பெயர்ந்த ஒருவராக ஜெகதீபன் மேற்கொண்ட முயற்சியைப் பாராட்டி ஏராளமான வாடிக்கையாளர்கள் அவரது உணவகத்தின் முன் திரண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு முன்னர், கடந்த 2023ஆம் ஆண்டில் இலங்கையில் பிறந்த தர்ஷன் செல்வராஜா என்பவர் பாரிஸின் சிறந்த "பகுட்" தயாரிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு, இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் இலங்கையர் என்ற வரலாற்றைப் படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் பொலிஸார் விழிப்புணர்வு நடவடிக்கை

போதைப்பொருள் பாவனையை ஒழிப்பது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை பொலிஸ் முன்னெடுத்து வருகின்றது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்க பொலிஸ் தீவிர கண்காணிப்பு மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

உங்கள் பிரதேசத்தில் போதைப் பொருள் விற்பனை அல்லது பாவனை தொடர்பான தகவல்கள் தெரிந்தால், அது குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

தகவல் வழங்குபவர்களின் விவ



ரங்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படும் என காவல்துறை உறுதியளித்துள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி செய்தி வெளியிட்டுள்ளது.
















# கண்காணிப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் பொலிஸாருக்கு இரண்டு நவீன வாகனங்கள்

இலங்கையில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில், நவீன கண்காணிப்பு கமரா அமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட இரண்டு விசேட வாகனங்கள் பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தில் காவல் துறை மா அதிபர் பிரியந்த வீரசூரிய தலைமையில் நேற்று இந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டன.

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி நிறுவப்பட்ட காவல் துறை கண்காணிப்பு கமரா பிரிவானது, ஏற்கனவே இரண்டு வாகனங்களைக் கொண்டு இயங்கி வந்தது.

தற்போது 9,794,000 ரூபா செலவில் அந்த வாகனங்கள் அதிநவீன தொழில்நுட்பக் கருவிகளுடன் தரம்






இந்த வாகனங்கள் போக்குவரத்து கட்டுப்பாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முக்கியஸ்தர்களுக்கான பாதுகாப்பு, விசேட மத மற்றும் கலாசார நிகழ்வுகள், மற்றும் தேசிய – சர்வதேச விளையாட்டுப் போட்டிகளின் போது கண்காணிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், போக்குவரத்து தரவுகளை சேகரித்தல், போராட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டங்களைக் கண்காணித்தல் போன்ற களப்பணிகளில் இந்த வாகனங்கள் முக்கிய பங்காற்றவுள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் துஷார குணமாலத் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.












# தற்போதைய அரசில் இளைஞர்களுக்கு நாடாளுமன்றக் குழுக்களில் இடமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

தற்போதைய அரசாங்கத்தில் இளைஞர்களுக்கு நாடாளுமன்றக் குழுக்களில் இடமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், இன்று மேற்பார்வைக் குழுக்களில் அங்கத்துவத்தை இழந்த இளைஞர்களைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“;அரகலய“ மக்கள் போராட்டத்தின் முக்கிய பெறுபேறாக, நாட்டின் கொள்கை வகுக்கும் பணிகளில் இளைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

சுமார் 400 இளைஞர்கள் நாடாளுமன்றக் குழுக்களில் உள்வாங்கப்பட்டு தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்கப்பட்டது.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, இளைஞர்களின் பங்களிப்பை முற்றாக நீக்கியுள்ளது.

போராட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கையை நடைமுறைப்படுத்தி இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், புதிய அரசாங்கம் அந்த வாய்ப்பைப் பறித்துள்ளது.


இளைஞர்களை இந்தக் குழுக்களில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அரசாங்கம் அதனைச் செவிமடுக்காமல் இளைஞர்களின் போராட்ட கோரிக்கைகளை மீறியுள்ளது.




நாட்டின் சனத்தொகையில் 25 வீதமான இளைஞர் தலைமுறையினருக்கு கொள்கை வகுப்பதில் வாய்ப்பளிப்பது ஜனநாயகத்தின் பொறுப்பாகும். இளைஞர்களின் குரலை நிராகரித்து ஒரு நாடு முன்னேற முடியாது.

எனவே, இந்த இளைஞர் பிரதிநிதித்துவத்தை மீண்டும் உடனடியாக வழங்குமாறு அரசாங்கத்திடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்,” – என்று தெரிவித்துள்ளார்.





# பிரேமன் நகர மேயருடன் விஜித ஹேரத் சந்திப்பு



யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக அங்கீகரிக்கப்பட்ட ஜெர்மனியின் பிரேமன் நகர மண்டபத்தில், பிரேமன் மேயர் ஆண்ட்ரியாஸ் போவன்சுல்ட் தனக்கு அளித்த அன்பான வரவேற்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது தொழில்துறை ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வாகன உற்பத்தி, வர்த்தகம் மற்றும் தளபாடங்கள் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கும் பிரேமன் நகரம், இலங்கையில் உருவாகி வரும் புதிய பொருளாதார வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்து சுமூகமான முறையில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஜெர்மனியில் இலங்கை ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாக மாறி வரும் நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே சுற்றுலாத்துறை சார்ந்த ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.






# மாணவர்களின் கல்வியை மேம்படுத்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(பா.சதீசன்)

பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் புத்தக பை, கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வேலாயுதம் கரிகாலனின் ஒழுங்கு படுத்தலில் Tamil Ad மற்றும் BBK Partnership இன் நிதிப் பங்களிப்பில் இன்று காலை

கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மந்துவில் மற்றும் உடையார்கட்டு பகுதிகளில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு, மந்துவில், வேணாவில், மூங்கிலாறு, உடையார்கட்டு, இளங்கோபுரம், மாணிக்கபுரம் மற்றும் வள்ளுவர்புரம் ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலன், பிரதேச சபை உறுப்பினர்களான சுதாகரன் வளர்மதி, அற்புதம் சற்குணதாஸ், ஓய்வு நிலை கிராம அலுவலர், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளீர் அமைப்பின் இணைப்பாளர் தீபன் அனுஸ்ரியா, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக இத்தகைய உதவி தொடர்ந்து வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.



# தேர்தல் வெற்றிக்காக முதல்வர் ஸ்டாலின் பிரிவினைவாத அரசியலை பேசுகின்றார்

## தமிழக பா.ஜ.க. விமர்சனம்

இந்த தேர்தலில் வெற்றி பெற வேண்டியது 'தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?' என்று முதல்வர் ஸ்டாலின் பிரிவினைவாத அரசியலை பேசி, கேள்வி கேட்டு வாக்கு வேட்டைக்காக நாடகம் நடத்துகிறார் என்று தமிழக பா.ஜ.க. விமர்சித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"பிரதமர் மோடியின் திருப்பரங்குன்றம் கோயில் வருகையும் தமிழ் கடவுள் முருகன் வழிபாடும் தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை உருவாக்கி ஆன்மிக அரசியல் சக்தியை உலகிற்கு உணர்த்தும்.

மதவெறி பிடித்த தி.மு.க. அரசின் மதவாத பிரிவினைவாத சதியை முறியடித்து இந்து, இஸ்லாமிய மக்கள் ஒன்றுபட்டு தமிழகத்தில் சகோதரர்களாக வாழ்வதை உறுதிப்படுத்தும். தமிழகத்தில் சிறுபான்மை வாக்கு வங்கிக்காக மதக் கலவரத்தை தூண்டி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அரசியல் ஆதாயம் தேட நினைத்த தி.மு.கவின் பயங்கரவாத திட்டத்தை முறியடிக்கும். இந்த தேர்தலில் வெற்றி பெறவேண்டியது 'தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா?' என்று முதல்வர் ஸ்டாலின் பிரிவினைவாத அரசியலை பேசி, கேள்வி கேட்டு ஓட்டு வேட்டைக்காக நாடகம் நடத்துகிறார்.

தமிழகத்தையும் டில்லியையும் முதல்வர் ஸ்டாலின் எந்நாளும் ஊழலால், அவதூறு பிரச்சாரத்தால் பிரிக்க முடியாது. காங்கிரஸ் ஆட்சியில் டில்லியுடன் கூட்டு சேர்ந்து 10 ஆண்டுகால ஊழலில் தி.மு.க. குடும்பத்தின் வருமானம் மட்டுமே உயர்ந்தது. தமிழகத்தை 10.50 லட்சம் கோடி இந்திய ரூபா கடனில் மூழ்க விட்ட ஊழல் தி.மு.க. அணி வீழும். முதல்வர் ஸ்டாலின் தி.மு.க. அரசின் ஊழல் பணத்தில் வாக்குக்கு ஒரு லட்சம் கொடுத்தாலும் வீட்டுக்கு 5 லட்சம் கொடுத்தாலும் மக்கள் தி.மு.கவை வீழ்த்தி, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மட்டும் தான் வாக்களிப்பார்கள்.

தமிழகத்தில் சொத்து வரி உயர்வு, மின்சார வரி உயர்வு, பால் விலை உயர்வு, மளிகைப் பொருள் விலை உயர்வு என தொடர் விலைவாசி ஏற்றத்தால் பரிதவித்துப் போகும் மக்களை திசை திருப்ப, ஊழல், வகுப்புவாதம், மதவாதம், பிரிவினைவாதம் பேசி, கஞ்சா, கள்ளச்சாராயம் படுகொலை, பயங்கரவாதம் கொடிகட்டி பறந்தாலும், அதைப் பற்றி கவலைப் படாமல் சொந்த மகன் உதயநிதி ஸ்டாலின் தமிழக முதல்வராக அரியணை ஏற கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலினின் தி.மு.க. அணி தமிழகத்தில் படுதோல்வியடையும்." என்று தமிழக பா.ஜ.க. குறிப்பிட்டுள்ளது.

# பன்னீர்செல்வம் சேர்ந்தமையின் மூலம் தி.மு.க. கூட்டணி வலுவடைந்துள்ளது

## திருமாவளவன் கருத்து



ஓ.பன்னீர்செல்வம் சேர்ந்தமையின் மூலம் தி.மு.க. கூட்டணி வலுவடைந்துள்ளது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று மதியம் சென்னையில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் மதுரைக்கு சென்றார். முன்னதாக, சென்னை விமானநிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததன் மூலம் மதச்சார்பற்ற கூட்டணிமேலும் வலுவடைந்துள்ளது. அவர் முதல்வராக பணியாற்றியவர். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவராக விளங்கியவர். அ.தி.மு.கவை ஒருங்கிணைத்து, ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பியதை நாடு அறியும். ஆனால் அவர் முயற்சி வெற்றி பெறவில்லை. இந்நிலையில் அவர் பா.ஜ.க. போன்ற கட்சிகளில் சேராமல், மீண்டும் தன்னை, திராவிட பாசறையில் இணைத்து கொண்டது, அவர் மீதான நன்மதிப்பை உயர்த்துகிறது.

அவர் பா.ஜ.கவுடன் நெருக்கமாக இருக்கிறார். பா.ஜ.க. சொல்படி செயல்படுகிறார் என்ற விமர்சனங்கள், அவர் மீது இருந்தன. ஆனால் அவர் எடுத்துள்ள முடிவு, அவர் நிதானமானவர், பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய தலைவர்களின் வழி வந்தவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

தி.மு.க. கூட்டணி எங்களை பேச்சுவார்த்தைக்கு 28 ஆம் திகதி அழைத்தனர். அன்று நான் ஊரில் இல்லை. எனவே வருகின்ற மார்ச் 2 ஆம் திகதி சந்திக்கலாம் என்று கூறியிருக்கின்றனர். எனது தலைமையில் 2 அல்லது 3 பேர் அந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வோம். அதற்கு தனியாக நாங்கள் குழு அமைக்கவில்லை. தி.மு.க. கூட்டணி மெகா கூட்டணி. நிறைய கட்சிகள் இணைந்து கொண்டு இருக்கின்றன. எல்லாவற்றையும் சீர்தூக்கி பார்த்து, அந்தந்த கட்சிகளின் வலிமைக்கு ஏற்ப முதல்வர் இடங்களை வழங்குவார்.

காங்கிரஸ் தேசிய கட்சி. கூட்டணி குறித்து இறுதி முடிவு டில்லியில் தான் எடுப்பார்கள். டில்லியில் இருந்து ஏதாவது தகவல் வந்தால், அதற்கு நாம் பதில் கூறலாம். அது தவிர இங்கு உள்ளவர்கள் மாற்று கருத்துகளை, காங்கிரசில் கூறுவது வழக்கம். அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டு பதில் கூற முடியாது." என்று அவர் தெரிவித்தார்.

# கொல்கத்தாவில் நில அதிர்வு பதிவு




பங்களாதேஷில் தென் மேற்கு பகுதியில் 10கிலோ மீற்றர் ஆழத்தில் நேற்று பிற்பகல் 1.22 மணிக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. இது 5.5 ரிக்டர் அளவில் பதிவானதாக இந்திய தேசிய நில நடுக் கவியல் மையம் உறுதி செய்தது.

இதனால், பங்களாதேஷின் அருகில் உள்ள மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவிலும் நில அதிர்வுகள் ஏற்பட்டன. வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் பீதி அடைந்து வீதிகளில் தஞ்சமடைந்தனர். இந்த நில அதிர்வால் உயிர்ச்சேதமோ, பொருள்சேதமோ ஏற்படவில்லை.



# ஆப்கானிஸ்தான் போர் தீவிரமடையும் சூழலில் பாகிஸ்தானை பாராட்டினார் டொனால்டு ட்ரம்ப்

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையிலான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இராணுவத் தளபதியை பாராட்டியுள்ளமை பரபரப்பை உருவாக்கியுள்ளது.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையிலான போரில் தலையிடுவீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த டொனால்டு ட்ரம்ப்,

“நான் தலையிடுவது குறித்து பரிசீலிப்பேன். ஆனால் நான் பாகிஸ்தானுடன் நன்றாகப் பழகுகிறேன். அவர்களுக்கு ஒரு சிறந்த பிரதமர், ஒரு சிறந்த இராணுவத் தலைவர் உள்ளனர். பாகிஸ்தானில் நான் மிகவும் மதிக்கும் இரண்டு பேர் தலைவர்களாக உள்ளனர். பாகிஸ்தான் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது.” என்று கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறையும் பாகிஸ்தானுக்கு ஆதரவளிப்பதாக சமிக்ஞை செய்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையிலான சமீபத்திய மோதலில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவிக்க பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் அம்னா பலோச்சுடன் பேசியதாக அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலாளர் அலிசன் எம் ஹூக்கர் கூறினார்.

“நாங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். மேலும் தலிபான் தாக்குதல்களுக்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்ளும் பாகிஸ்தானின் உரிமைக்கு ஆதரவை வெளிப்படுத்தினோம்.” என்று ஹூக்கர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், பாகிஸ்தானில் உள்ள தங்கள் குடிமக்களுக்கு அமெரிக்கா பயண எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், பொது இடங்களுக்கு பயணம் செய்யும்போது எச்சரிக்கையாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.





# இஸ்ரேல் நோக்கி ஈரான் ஏவுகணைத் தாக்குதல்

ஈரானிலிருந்து இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானியப் பகுதியிலிருந்து இஸ்ரேலிய எல்லைகளை இலக்கு வைத்து ஏவுகணைகள் ஏவப்பட்டதை இஸ்ரேலிய இராணுவம் கண்டறிந்துள்ளது.

இந்தநிலையில், இஸ்ரேல் முழுவதும் அபாய எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கவிடப்பட்டுள்ளன. பொதுமக்கள் அனைவரும் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஈரானின் ஏவுகணைகளை இடைமறித்து அழிப்பதற்கான நடவடிக்கைகளில் இஸ்ரேலிய வான் பாதுகாப்புத்துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இன்று அதிகாலை இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து ஈரான் மீது நடத்திய வான்வழித் தாக்குதல்களுக்குப் பதிலடியாகவே ஈரான் இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளதாகத் தெரிகிறது.

இதனால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் பதற்றம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.



# பொலிவியாவில் பண தாள்களை ஏற்றிச் சென்ற விமானம் விபத்து

## 15 பேர் உயிரிழப்பு

பொலிவியா தலைநகர் லா பாஸுக்கு அருகில் அந்நாட்டு பண தாள்களை ஏற்றிச் சென்ற இராணுவ சரக்கு விமானம் ஓடுதளத்தில் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். விபத்தின் போது சிதறிய பணத்தை அள்ளிச் செல்ல முயன்ற மக்களை பொலிஸார் விரட்டி அடித்தனர்.

சி-130 ஹெர்குலஸ் நிறுவனத்தின் போக்குவரத்து விமானம், எல் ஆல்டோ சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையை விட்டு விலகி ஒரு குடியிருப்புப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

“விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை நாங்கள் மீட்டு வருகிறோம். இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்துள்ளனர்” என்று தேசிய தீயணைப்புத் துறையின் அதிகாரி பாவெல் டோவர் செய்தியாளர்களிடம் கூறினார்,

இருப்பினும், உயிரிழந்தவர்கள் விமானத்தில் இருந்தார்களா அல்லது லா பாஸ் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள நெடுஞ்சாலையில் நின்ற கார்களில் இருந்தார்களா என்பதை டோவர் தெளிவுபடுத்தவில்லை.

லா பாஸுக்கு அருகில் உள்ள எல் ஆல்டோ நகரில் வாகனங்கள் மீது மோதிய விமானம், பின்னர் ஒரு வயலில் விழுந்தது. விமானம் விபத்துக்குள்ளானபோது அது புறப்பட்டதா அல்லது தரையிறங்கியதா என்பது குறித்து முரண்பட்ட தகவல்கள் உள்ளன. இந்த விபத்தில் குறைந்தது 15 வாகனங்கள் சிக்கின என்றும், தீயணைப்பு வீரர்கள் விமானத்தை சூழ்ந்த தீயை அணைத்தனர் என்றும் டோவர் கூறினார். விபத்து காரணமாக எல் ஆல்டோ விமான நிலையத்துக்கு செல்லும் மற்றும் புறப்படும் அனைத்து விமானங்களும் தற்காலிகமாக நிறுத் தப்பட்டுள்ளன.







கனடா முரசு
சனிக்கிழமை | 28/02/2026

**கனடாவில் பெருமளவான போதைப்பொருள் பறிமுதல்**



02



# இந்தியா சென்றடைந்தார் கனடா பிரதமர் மார்க் கார்னி

நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக கனடா பிரதமர் மார்க் கார்னி நேற்று இந்தியா சென்றடைந்தார்.

இந்தியாவுடனான உறவை சீரமைக்கவும், வர்த்தகத்தை மேம்படுத்தவும் கனடா பிரதமரின் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிர மாநிலம் மும்பை சென்றடைந்த மார்க் கார்னி, அங்குள்ள முன்னணி தொழில் அதிபர்கள் மற்றும் வணிகக் குழுக்களைச் சந்தித்துப் பேசினார்.

இன்று அவர் டில்லி செல்கிறார். அங்கு திங்கட்கிழமை பிரதமர் மோடியை சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

# அமெரிக்காவுடனான உறவை முறிக்க கூடாது



## கனடிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கனடாவின் நீண்டகால அமெரிக்க உறவை மாற்றும் வகையில் சீனாவை மாற்று கூட்டாளியாக பார்க்கக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியேவ் எச்சரித்துள்ளார்.

கனடாவின் செழிப்பும் பாதுகாப்பும் அமெரிக்காவுடனான நிலையான உறவுடன் இணைந்தவை என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு ஆண்டுக்கு முன்பு சீனாவை கனடாவுக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என கூறியவரே பிரதமர் கார்னி என அவர் நினைவூட்டியுள்ளார்.

கனடாவில் வெளிநாட்டு தலையீடு குறித்து நடத்தப்பட்ட விசாரணையின் பின்னர் வெளியான அறிக்கையில், சீனா - மிக நீடித்த மற்றும் சிக்கலான தலையீட்டு அச்சுறுத்தல் எனவும், இந்தியா இரண்டாவது முக்கிய அச்சுறுத்தல் எனவும் குறிப்பிடப் பட்டிருந்தது எனவும் பொய்லிவ்ரே சுட்டிக்காட்டியுள்ளார்.

வர்த்தக பன்முகப்படுத்தல் அவசியம். ஆனால் எல்லா கூட்டாளிகளும் ஒன்றுக்கொன்று மாற்றாக இருக்க முடியாது என அவர் கூறினார்.

அமெரிக்காவுடன் உள்ள உறவை முறிக்கும் எண்ணம் தவறு என அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவை 51 ஆவது மாநிலமாக மாற்றுவோம் என்ற கருத்தை அவர் கடுமையாக நிராகரித்தார்.

அது நகைச்சுவையாக இருந்தாலும் ஏற்க முடியாத ஒன்று. அது நிகழ வாய்ப்பு பூஜ்யம் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

02




# கனடாவில் பெருமளவான போதைப்பொருள் பறிமுதல்

## மூவர் கைது

கனடாவின் பிரான்ட்பேர்ர்ட் பொலிஸார் பெருமளவு சட்டவிரோத போதைப்பொருள்களை பறிமுதல் செய்ததாக தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் தொடங்கிய விசாரணையின் தொடர்ச்சியாக, திங்கள்கிழமை சந்தை மற்றும் ஷெரிடான் வீதிகளுக்கு அருகாமையில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையின் போது பொலிஸார் 462.6 கிராம் பென்டனில், 677 ஹைட்ரோமார்போன் மாத்திரைகள், 175.5 கிராம் மெத்தாம்பெட்டமின், 36.8 கிராம் கோக்கெய்ன், ஸ்டன் கன், லோடு செய்யப்பட்ட கைதுப்பாக்கி, கத்தி, பெரிய அளவு பணம், ஒரு வாகனம் என்பனவற்றை பறிமுதல் செய்ததாக அறிவித்துள் ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களின் மொத்த சந்தை மதிப்பு சுமார் 113,700 டொலர்கள் என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது நடைபெற்ற அதே நாளில் இரவு, பிரான்ட்போர்ட் நகரிலுள்ள இரண்டு வீடுகளிலும் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்படைய குற்றச்சாட்டில் 38 வயதா னபிரான்ட்போர்டைச் சேர்ந்த ஒருவரும், 33 மற்றும் 34 வயதான ஹமில்டனைச் சேர்ந்த நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.






# 325 கிலோ கொகேய்னுடன் 17 வயதான சிறுவன் கைது

கனடாவில் 7 மில்லியன் டொலருக்கும் அதிக மதிப்புள்ள 325 கிலோ கொகேய்ன் போதைப்பொருளுடன் 17 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவு மேற்கொண்ட விசாரணை இந்த வாரம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது டர்ஹம் போலீஸ் சேவையின் வரலாற்றில் மிகப்பெரிய போதைப்பொருள் பறிமுதல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.


போதைப்பொருள் விற்பனை நோக்கில் கொகேய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிறுவன் முதலில் காவலில் எடுக்கப்பட்டார்.

தொடர்ந்து, விசாரணையாளர்கள் டொராண்டோ நகரிலுள்ள ஒரு இடத்தில் சோதனை உத்தரவை நிறைவேற்றினர். அங்கு மேற்கொண்ட சோதனையின் போது, 325 கிலோ கொகேய்ன் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த போதைப்பொருளின் மொத்த சந்தை மதிப்பு 7 மில்லியன் டொலருக்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக தகவல் உள்ளவர்கள் முன்வந்து பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்பு பிரிவை தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கைது, கனடாவில் இளைஞர்கள் தொடர்பான போதைப்பொருள் வியாபாரத்தின் தீவிரத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.



# மிசிசாகாவில் வாகனம் மோதி முதியவர் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் மிசிசாகாவில் நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு வாகனம் மோதியதில் நடந்து சென்ற முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாலை 7.10 மணியளவில் லேக் ஷோர் மற்றும் ஸ்டேவ்பேங்க் சந்திப்பு பகுதியில் விபத்து சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்குத் திசையில் பயணித்த நீல நிற Chevy Trax வாகனம் வீதியின் நடுப்பகுதியில் கடந்து சென்ற பாதசாரியை மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனத்தை செலுத்திய நபர் சம்பவ இடத்திலேயே தங்கி இருந்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

70 வயதுக்கு மேற்பட்ட முதியவர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பீல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



